சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08
ந.க.எண்.6146/ஆ3/2022, நாள்.22.09.2022

பொருள்: பள்ளிக் கல்வி – அரசு / அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி பாடத் திட்டம் மறு சீரமைக்கப்பட்டது – வேலைவாய்ப்புத் திறன்கள் (Employability Skills) பாடத்திற்கு மதிப்பெண்கள் வழங்குதல் – சார்ந்து.

பார்வை: சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.50510/ பிடி2/ இ2/2021, நாள்.21.09.2022.

---------

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி, மாணவர்களின் வேலைவாய்ப்பு திறன்களை மேம்படுத்தும் வகையில் 2022-2023 ஆம் கல்வியாண்டு முதல் வேலைவாய்பு திறன்கள் (Employability Skills) என்ற புதிய பாடநூல் நடைமுறைபடுத்தப்பட்டு பாட நூல்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அப்பாடநூலினை மாணவர்களுக்கு கற்பிக்க ஏதுவாக ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக மாணவர்களின் நலன் கருதி இக்கல்வியாண்டு முதல் வேலைவாய்ப்புத் திறன்கள் (Employability Skills) பாடத்திற்கு காலாண்டுத் தேர்வுகள் நடத்துதல் சார்ந்தும் மற்றும் மதிப்பெண்கள் வழங்குதல் சார்ந்து அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்காண் பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகளில் அறிவுறுத்திவுள்ளவாறு செயல்பட தங்கள் கல்வி மாவட்டத்திலுள்ள அரசு / அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு தெரிவிக்கவும் மற்றும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு:பார்வையில் காண் செயல்முறைகள்.

முதன்மைக் கல்வி அலுவலர்
இ/ம 22/9/2022 சென்னை.

பெறுநர்
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
சென்னை மாவட்டம்.